1980 ஜூலை 30]

திரு. பாபு ஜனார்த்தனன்: தலைவர் அவர்களே, நாகர் கோவில் பெரிய அரசு மருத்துவ மனைக்கு ஸ்பெஷலிஸ்ட்டுகளும், பல லட்ச ரூபாய் அளவிற்கு கட்டிட வசதியும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது உள்ளபடியே வரவேற்கத் தக்கதொன்றாகும். மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். அதேபோல், பல்வேறு நகராட்சி பகுதிகளிலும் இது போன்ற வசதிகளை அமைச்சர் அவர்கள் உடனடியாக நிறைவேற்றுவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நாகர் கோவிலில் மட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒரு தனி வகையிலேயே எல்லாவற்றையும் ஆராய்ந்து, எந்தெந்த இடங்களில் விரிவுபடுத்தி, நல்ல நிபுணர்களை அனுப்பலாம் என்று சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம். ஏனெனில் இதிலே ஓரளவிற்கு அந்த மாவட்டத்தில் உள்ள மருத்துவ மனைகளில் நிபுணர்கள் போடாமல் இருக்கிற காரணத்தால், விரைவில் அதற்குரிய ஏற்பாடு செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமசந்திரன்: தலைவர் அவர்களே, டி. பி. நோயாளிகளுக்கு ஒரு பிரிலிமினரி டெஸ்ட் நடத்துவதற்குத் தகுந்த அளவில் ஒரு டி. பி. ஸ்பெஷலிஸ்ட் பதவியை அந்த நாகர் கோவில் தலைமை மருத்துவ மனையில் அரசு ஏற்படுத்துமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அங்கே டி.பிக்காக ஒரு தனிப்பட்ட மருத்துவ மனை இல்லையென்றாலும், அதற்காக ஒரு டிப்பார்ட்மென்ட் இருக்கிறது. அந்த டிப்பார்ட்மென்டில் எல்லாப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. ஒரு எம். டி. செஸ்ட் டிஸ்ஸீஸ் இல்லை என்றாலும், அங்குள்ள டாக்டர் எம். டி. படித்தவர், டி.பி. வியாதியை நன்றாக கவனித்து அதற்குத் தகுந்த சிகிச்சைச் செய்வதற்காக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை-கொடைக்கானல் இடையே குளு, குளு பேருந்துப் போக்குவரத்து.

கு.கா. வி. எண். 51—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சென்னையிலிருந்து கொடைக்கானலுக்கு ஈரோடு, திருப்பூர், பழனி வழியாக குளு குளு பேருந்து விடும் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி :

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே, பல்லவன் டிரான்ஸ்போர்ட் இரண்டு பஸ்களை பழனிக்கு விட்டுக் கொண்டு இருந்தார்கள். அதிலே ஒன்று இப்போது நின்று விட்டது. சென்ற ஆண்டு இதே மன்றத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பழனிக்கு குளு குளு வசதி பஸ் விடப்படும் என்று சொன்னார்கள். அதை மனதில் வைத்துத்தான் இந்தக் கேள்வியைக் கேட்டேன். கொடைக்கானல் மிகப்பெரிய கோடை வாசஸ்தலமாக இருப்பதால், ஆயிரக்கணக்கான வெளிநாட்டுப் பயணிகள் அங்கே செல்கிறார்கள். ஆகவே, திருப்பூர், ஈரோடு பழனி வழியாக ஒரு குளு குளு பஸ் விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே; இங்கே சென்னையில் இருந்து கோடைக்கானல் வரை பஸ் வசதி வேண்டும் என்று தான் கேள்வி கேட்டு இருக்கிறார்கள். எனவே, பழனி வரை என்ற வினா எழவில்லை. கொடைக்கானலுக்கு குளு குளு வண்டி விடுவதில் என்ன சிரமம் என்றால், அந்தக் கொடைக்கானல் பாதையில் பெரிய வண்டிகளை விடமுடியாது. சிறிய வண்டிகளுக்கு குளு குளு இயந்திரங்கள் பொருத்துவது என்று சொன்னால், அது மிகக் குறைந்த அளவில் உள்ள பயணிகளைத்தான் ஏற்றிச் செல்லமுடியும். எனவேதான் அது முடியாது என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. பாராட்டுரை.

ஒலிம்பிக் ஹாக்கி விளையாட்டில் இந்தியா தங்கப் பதக்கம் பெற்றுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரெட்டு ஆண்டுகளுக்குப் பின்னால் இந்திய நாட்டு ஹாக்கி விளையாட்டு வீரர்கள் மாஸ்கோவில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டில் வெற்றிபெற்று, தங்கப் பதக்கம் பெற்று,